## 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்தல் (Submission)

## இளநிலைப் பாடப்பிரிவு

**விதிமுறைகள்:**

**விண்ணப்பப்படிவத்தை ஒப்படைப்பதற்கு முன் கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

- விண்ணப்பப்படிவத்தை ஒப்படைப்பதற்கு முன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் வரிசைமுறைப்படி இருக்கின்றதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தை **ஒரே ஒரு முறை மட்டுமே ஒப்படைக்க முடியும்.** எக்காரணங்கொண்டும் மறுமுறை அதே விண்ணப்பத்தை ஒப்படைக்க முடியாது.
- அனைத்து ஆவணங்களும் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் **PDF கோப்பாக** (PDF format) இருந்தால் மட்டுமே பதிவேற்றம் செய்ய முடியும்.
- விண்ணப்பப்படிவத்தையும், அதனோடு கூடிய அனைத்து சான்றிதழ்களும் **தெளிவாகவும், வாசிக்கும் படியாகவும்** ஸ்கேன் செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப்படிவத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள **மின்னஞ்சல் முகவரி** மற்றும் அலைபேசி வழியாகவே தான் (E-mail Id, Mobile Number) கல்லூரி சேர்க்கை பற்றிய அனைத்து தொடர்புகளும் நடைபெறும்.
- கல்லூரி விடுதிக்கு மாணவியர் விண்ணப்பத்து இருக்கும் நிலையில் விடுதி திறப்பு குறித்து தற்சமயம் எவ்வித உறுதிமொழியும் வழங்க இயலாது. **கல்லூரி மாணவியர் ஒவ்வொருவருடைய பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்ட பின்னரே கல்லூரி விடுதி செயல்படத் தொடங்கும்.**
- பெற்றோரும், மாணவியரும் தற்போதுள்ள கொரோனா பெருந்தொற்று காலத்தில் நிலவியிருக்கும் அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு விடுதி சேர்க்கையில் ஒத்துழைப்பு தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்குத் தேவையான செயல்முறைகள்:**

- விண்ணப்பப்படிவத்தில் **செயல்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்**
- ஸ்கேன் செய்த PDF கோப்புகளாக (Files) இணைக்கப்பட வேண்டியவை:
    - **புகைப்படத்துடன் கூடிய நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம்.**( அதிகபட்ச அளவு 3 MB)
    - **மேனிலைப்பள்ளி மதிப்பெண் சான்றிதழ்** (அதிகபட்ச அளவு 1 MB)
    - **சாதிச்சான்றிதழ்,** OC அத்தாட்சி சான்றிதழ் (அதிகபட்ச அளவு 1 MB)

**விண்ணப்பப்படிவத்தை ஒப்படைப்பதற்கான மூன்று படிநிலைகள்:**

- **படிநிலை 1(Step 1)** : விண்ணப்பப்படிவத்தின் எண்ணைக் குறிப்பிடவும். ஒப்படைப்பிற்கான (Submit) பட்டனை அழுத்தவும். உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு OTP எண் வந்து சேரும்.
- **படிநிலை 2(Step 2)** : OTP எண்ணைப் பதிவிடவும். ஒப்படைப்பிற்கான பட்டனை அழுத்திய உடன் பதிவேற்றப் பக்கம் திறக்கப்படும்.
- **படிநிலை 3 (Step 3)** : உங்கள் விண்ணப்பப்படிவத்தின் எண்ணும், பெயரும் சரிபார்க்கப்படும். இவை சரியான விவரமாக இருந்தால் மட்டுமே அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒப்படைப்பிற்கான பட்டனை அழுத்தவும். இதன் பின் ஒப்புகைக்கான (Acknowledgement) பக்கம் வரும். நீங்கள் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு இந்த ஒப்புகை மின்னஞ்சல் அனுப்பப்படும். விண்ணப்பத்தை வெற்றிகரமாக ஒப்படைத்ததற்கான அடையாளச்சான்றாக இம்மின்னஞ்சலைக் கொள்ளலாம்.